# தமிழ்நாட்டின் தென் மாவட்டங்களில் பேசக்கூடிய வட்டார வழக்குச் சொற்கள் ஒரு பார்வை

**ச. விக்ரம்[1] & முனைவர் செ. மார்கண்டன்[2]**
[1]முழு நேர முனைவர்பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை
வேல்ஸ் அறிவியல் தொழில்நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம், பல்லாவரம், சென்னை, தமிழ் நாடு
[2]நெறியாளர், இணைப் பேராசிரியர், தமிழ்த்துறை
வேல்ஸ் அறிவியல் தொழில்நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம் பல்லாவரம், சென்னை, தமிழ் நாடு

Open Access

Manuscript ID: BIJ-2025-J-101

Subject: Tamil

Received : 09.06.2025
Accepted : 09.07.2025
Published : 28.07.2025

Copy Right:

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License.

மொழியானது மனிதன் வாழக்கூடிய இடத்தையும், சூழ்நிலையையும் பொறுத்தே அமைகின்றன. ஒவ்வொரு மனிதனும் பேசக்கூடிய மொழிகளில் தென் மாவட்டங்களின் வாயிலாக சொற்கள் மாற்றம் அடைந்து பொருளைத் தருகின்றன. அவ்வாறான சொற்கள் எம்முறையில் வட்டார வழக்குச் சொற்களாக மாற்றம் அடைந்து மக்களிடயே புழக்கத்தில் இருக்கின்றன என்பதனை பற்றி கீழ்க்காணும் கட்டுரையின் மூலம் விரிவாக காண்போம்.

**முக்கியச் சொற்கள்: வந்தாங்கெ, இன்டார்டு, முடுக்குது, கஷண்டி, பைதா, வெள் உவன்**

**வட்டார வழக்குச் சொல்லின் விதி**

பெரும்பாலான வட்டார வழக்குகளில் "மின்தொடர்பு விதி" செயல்படுகிறது. மின்சாரம் இருபுள்ளிகள் நடுவே இருக்கும் குறைந்த தூரத்தையே தேர்வு செய்யும். அதுபோல, சொற்களின் முதல் – கடைசி என இருபுள்ளிகள் நடுவே உச்சரிப்பு அதிவேகமாக ஓடிச் செல்வதை வட்டார வழக்கின் ஒரு விதி எனலாம்.

உதாரணமாக, "நாராயண அய்யர்" என்ற சொல் "நார்ணயர்" என்று மாற்றம் அடைகிறது.

**தமிழ்நாட்டில் பேசக்கூடிய வட்டார வழக்குச் சொற்கள்**

ஒவ்வொரு மனிதனும் பேசக்கூடிய மொழிகளில் இருந்து பல கிளை மொழிகள் தோன்றுகின்றன. அவ்வாறு தோன்றுகின்ற கிளை மொழிகளை வட்டார மொழி என்று அழைக்கப்படுகிறது.

சான்றாக, சங்க காலத்தில் வட்டார வழக்குச் சொற்கள் இருந்துள்ளன என்பதை, பன்றி நாடு, குட்ட நாடு, குட நாடு, அருவா நாடு" என "செந்தமிழ்சேர் பன்னிருநிலத்தை" வட்டார அடிப்படையில் தான் பிரித்திருக்க வேண்டும். ஏனெனில் பின்னர் தோன்றிய உரையாசிரியர்கள், ஏதேனும் ஒரு உயிரினத்தையோ அல்லது ஒரு பொருளையோ குறிக்கும் பெயரினை நாட்டினுக்கு நாடு வேறுபடுகிறது என்று குறிப்பிட்டுள்ளனர்.

இன்று தமிழ்நாட்டில் தென் மாவட்டங்களில் பேசக்கூடிய வட்டார வழக்குச் சொற்கள், மக்களிடம் சாதி வழக்குச் சொற்கள், சமய வழக்குச் சொற்கள்,

தொழில் வழக்குச் சொற்கள், பிற வழக்குச் சொற்கள் என பிரிவுகளைக் கொண்டு மக்களிடம் பேசப்பட்டு வருகிறது.

தமிழகத்தில் மட்டுமல்ல உலகளவில் தமிழில் "22 வட்டார வழக்குகள்" இருப்பதாக "எத்னொலோக்" என்ற உலக மொழிகள் பற்றிய பதிப்பு நிறுவனம் தெரிவிக்கிறது.

அவையாவன, "ஆதி திராவிடர், ஐயர், ஐயங்கார், அரவா, பருகண்டி, கசுவா, கொங்கர், கொரவா, கொர்சி, மதராசி, பரிகலா, பாட்டு மொழி, இலங்கை தமிழ், மலேசியா தமிழ், பர்மா தமிழ், தென்னாப்பிரிக்கா தமிழ், திகாலூ, அரிசன், சங்கேதி, கெப்பார் போன்றவைகளாகும்.

**சாதி வழக்குச் சொற்கள்**

தமிழ்நாட்டில் வாழக்கூடிய மக்கள் பல சாதி பிரிவின் அடிப்படையில் பிரிக்கப்பட்டுள்ளனர். ஒவ்வொரு சாதியினரும் அவரவர் அடையாளத்தை அடிப்படையாகக் கொண்டு வாழ்ந்து வருகின்றனர். தமிழ்நாட்டில் அதிகபடியாக ஒரே மாவட்டத்தில் வாழக்கூடிய சாதியினரின் மொழிகள் தனிப்பட்ட வழக்காக அமைந்துள்ளது.

உதாரணமாக, மதுரை மாவட்டத்தில் உசிலம்பட்டி வட்டாரத்தில் கள்ளர் சாதியினரும், கோவை மாவட்டத்தில் கவுண்டர் சாதியினரும் என பெரும்பாலான மக்கள் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் பல்லாண்டு காலமாக ஒரே எல்லைக்குள் வாழ்ந்து வருவதால், இவர்கள் பேசக்கூடிய மொழியானது தனித்து காணப்பட்டு வருகிறது.

உறவுமுறைகளில் பேசக்கூடிய சொற்களை ஒவ்வொரு சாதியினரும் வெவ்வேறு விதமாக பின்பற்றுகின்றனர்.

சான்றாக, "அப்பாவின் அப்பாவை – அய்யாப்பா, அப்பச்சி, அய்யா, பாட்டையா, தாத்தா, அப்பப்பா என்று ஒவ்வொரு சாதியினரிடத்தும் வட்டார வழக்குச் சொற்கள் தனித்து காணப்படுகிறது.

இவற்றைப் போன்றே பிராமணர்களில் ஐயர் பிரிவினர் ஒருவிதமாகவும், அய்யங்கார் பிரிவினர் வேறு விதமாகவும் சொற்களைப் பேசுகின்றனர். எனவே, பிராமணர் பேசும் தமிழ், பொதுவாகப் பிறர் பேசும் தமிழுடன் வேறுபட்டு காணப்படுகிறது. இவ்வாறு சாதி அடிப்படையில் வழக்குச் சொற்கள் காணப்படுகிறது.

**சமய வழக்குச் சொற்கள்**

சமய அடிப்படையில் தமிழானது தனித்த அடையாளத்துடன் காணப்பட்டு வருகிறது. சான்றாக, ஏறக்குறைய 300 ஆண்டுகளுக்கு முன்னர் மொழிபெயர்க்கப்பட்ட "கிறிஸ்துவ வேத மறையான விவிலிய" காணப்படும் சமஸ்கிருதம் தழுவிய சொற்கள், இன்றும் கிறிஸ்துவர்களிடையே பெரும்பாலும் வழக்கில் உள்ளன.

கிறிஸ்துவர்களின் வழிபாட்டுக் கூட்டங்களிலும் ஜெபக் கூட்டங்களிலும் பயன்படுத்தும் தமிழ்ச் சொற்கள் அவரவர்களால் மட்டுமே பயன்படுத்தப்படுகின்றன.

இஸ்லாமிய சமயத்தைச் சார்ந்த மக்கள் தொடக்கத்தில் அரபு மொழியின் அமைப்பில் இறைவனைத் தொழுது வணங்கினர். அண்மைக் காலமாகத் தான் தமிழிலும் வழிபட தொடங்கினார்கள். இதற்குத் துணையாகத் தான் குரானைத் தமிழாக்கியுள்ளனர். எனினும் இவர்கள் அரபு மொழியிலுள்ள முக்கியமான சொற்களை தமிழுடன் இணைத்து எழுதுகின்றனர்.

இஸ்லாம் கிறித்தவ சமயத்தினர் சமய அடிப்படையில் அவர்களுக்கெனத் தனித்தனியாகப் பயன்படுத்தக் கூடிய சொற்கள் இன்னும் வழக்கில் தொகுக்கப்படடாமலே காணப்படுகின்றன. இத்தகைய சொற்கள் சேகரிக்கப்படும்போது, அவை சொல் மூலங்களாக விளங்கும்.

**தொழில் வழக்குச் சொற்கள்**

ஒருவர் செய்கின்ற தொழில் காரணமாக அவர் தொழில் செய்யும் வட்டாரத்தில் தனிப்பட்ட சொற்களைப் பயன்படுத்துவது இயல்பாகும். அடிப்படை தொழில் நுட்பம் சார்ந்த கைவேலைக்கு முக்கியத்தும் தரப்படும் மரவேலை, சிற்ப வேலை, இரும்பு வேலை, கொத்து வேலை போன்ற வேலை செய்திடும் தொழிலாளர்கள் தாங்கள் புழங்கிடும் கருவிகள், தொழில் நுட்பம் சார்ந்த வேலைகளுக்குத் தனிப்பட்ட சொற்களைப் பயன்படுத்துகின்றனர்.

உழவர்கள், மீனவர்கள், உப்பளத் தொழிலாளர்கள், கோயில் அர்ச்சகர்கள் போன்றோர் அவரவர் தொழில் அடிப்படையில் வட்டார வழக்குச் சொற்களைப் பயன்படுத்துகின்றனர்.

சான்றாக, "screw driver" என்ற கருவிக்குத் தமிழில் "புரி முடுக்கான்" என்ற கலைச்சொல் உருவாக்கப்பட்டது. ஆனால், மரவேலை செய்யும் கைவினைஞர்கள் அதனைத் "திருப்பு உளி" என்று குறிப்பிட்டு வருகின்றனர்.

**பிற வழக்குச் சொற்கள்**

மங்கலம் அல்லாதவற்றை மங்கலமான சொற்களால் குறிப்பிடுவது "மங்கல வழக்கு" என இலக்கணம் குறிப்பிடுகிறது. அவையில் சொல்லத்தகாத சொற்களை

மறைத்து வேறு சொற்களால் நாகரிகமாக எடுத்துக் கூறுவது "இடக்கரடக்கல்" எனப்படும். ஒவ்வொரு குழுவில் உள்ளோரும் ஏதேனும் ஒரு பொருளினது சொற்குறியை மறைத்து வேறு சொற்குறியால் குறிப்பது "குழூஉக்குறி" எனப்படும்.

மங்கல வழக்கு, இடக்கரடக்கல், குழூஉக்குறி ஆகிய மூன்று வழக்குகளிலும் சொற்கள் வேறு தளத்தில் புழங்குவதனைக் காணலாம். இத்தகைய சொற்களை ஒரு வகையில் "சொற்களஞ்சியம்" என்றும் கூறலாம்.

**தென் மாவட்டம் வாரியாக வட்டார வழக்குச் சொற்கள்**

**மதுரை மாவட்ட வட்டார வழக்குச் சொற்கள்**

மதுரை மாவட்டத்தில் பேசக்கூடிய வட்டார வழக்குச் சொற்கள், சில சொற்கள் மட்டும் மற்ற வட்டார வழக்குச் சொற்களில் இருந்து வேறுபட்டு காணப்படும்.

**உதாரணமாக,**

வந்தாங்கெ - வந்தார்கள்
போனாங்கெ - போனார்கள்
அங்கனக்குள்ள - அங்கே
இங்ஙனக்குள்ள - இங்க
அங்கிட்டு - அந்த இடத்தில்
இங்கிட்டு - இந்த இடத்தில்
ரொம்ப சூதானமாக போய்ட்டு வா - ரொம்ப ஜாக்கிரதையா போய்ட்டு வா
வெஞ்சாமரத்தாலே வீசிபுடுவேன் - விளக்குமாற்றால் அடித்துவிடுவேன்

**திண்டுக்கல் மாவட்ட வட்டார வழக்குச் சொற்கள்**

திண்டுக்கல் மாவட்டத்தில் பேசக்கூடிய வட்டார வழக்குச் சொற்கள், பொதுவாக மதுரை தமிழில் பேசப்படுகிறது.

**உதாரணமாக,**

தண்ணி -தண்ணீர்
சுவாசமா - சூடான
விளக்கு - வெளிச்சம்
இன்டார்டு - ஒரு பெண்ணுக்கு மரியாதைக்குரிய சொல்
சவுசமா இருக்கியாலா? - நலமா?

**திருநெல்வேலி மாவட்ட வட்டார வழக்குச் சொற்கள்**

திருநெல்வேலி மாவட்டத்தில் பேசக்கூடிய வழக்குச் சொற்கள், தமிழ் மொழியின் ஒரு பகுதியாகும். இது மற்ற வட்டார வழக்குச் சொற்களில் இருந்து வேறுபட்டு காணப்படுகிறது. திருநெல்வேலி மாவட்ட வட்டார வழக்குச் சொற்கள் பொதுவெளியில் பயன்படுத்தப்படுவதைவிட, வீட்டுக்குள்ளே அதிகமாக பயன்படுத்தி வருகிறார்கள்.

**உதாரணமாக,**

ஆச்சி - பாட்டி
பைதா - சக்கரம்
வயக்காடு - வயல்வெளி
வெள் உவன் - வெள்வெட்டி
மறுகால் பாயுது - குளத்திலுள்ள நீர் கால்வாய்க்கும் போவது
முடுக்குது - நெருக்குகிறது

**கன்னியாகுமரி மாவட்ட வட்டார வழக்குச் சொற்கள்**

கன்னியாகுமரி மாவட்டத்தில் மக்கள் பேசக்கூடிய வட்டார வழக்குச் சொல்லானது, தமிழ்நாட்டில் வேறு எந்த பகுதிகளிலும் வழங்காத சொற்களெல்லாம் கன்னியாகுமரி மாவட்டத்தில் அதிகளவில் பயன்பாட்டில் உள்ளது.

**உதாரணமாக,**

கனமா - நிறைய என்று பொருள்
கண்டி - தலை வழுக்கை
காஞ்ச வெள்ளம் - வெந்நீர் (காய்ந்த நீர்)
இஞ்ச - இங்கே
அங்கன - அங்கே
உச்சி - மதியம்
ஒடக்கு / உடக்கு - சண்டை, மனக்கசப்பு

**சிவகங்கை மாவட்ட வட்டார வழக்கச் சொற்கள்**

சிவகங்கை மாவட்டத்தில் பேசக்கூடிய வட்டார வழக்குச் சொற்கள் சிலவற்றைக் காண்போம்.

**உதாரணமாக,**

அண்ணே (அன்னே) - சகோதரர்
அப்பா - தந்தை
மச்சான் - நண்பர்
அத்த - பெரிய தாய்
அம்மாமா - மாமன் மனைவி
எத்தன வாட்டி ? - எத்தனை முறை
இராமநாதபுரம் மாவட்ட வட்டார வழக்குச் சொற்கள்:

இராமநாதபுரம் மாவட்டத்தில் பேசக்கூடிய வட்டார வழக்குச் சொற்கள், தமிழ் வட்டார வழக்குச் சொற்களில் ஒரு குறிப்பிடத்தக்க வகையாகும். இராநாதபுரம் மாவட்டத்தில் பேசப்படபடும் வட்டார வழக்குச் சொற்களிலிருந்து வேறுபடுகின்றன.

Vol. 9 No. 4 July 2025
E-ISSN: 2456-5571

**உதாரணமாக,**

இங்குட்டு - இங்கே
அங்குட்டு - அங்கே
போங்கட்டு - போங்கள்
வராங்கட்டு - வாருங்கள்

**தேனி மாவட்ட வட்டார வழக்குச் சொற்கள்**

தேனி மாவட்டத்தில் பேசக்கூடிய வட்டார வழக்குச் சொற்கள், மற்ற வட்டார வழக்குச் சொற்களைப் போலவே, சில சொற்கள் மற்றும் வாக்கியப் பிரயோகங்கள் வழக்கத்தில் உள்ளன.

**உதாரணமாக,**

எங்கேயோ போயிட்டான் - எங்கேயோ போய்ட்டான்
அப்போ - அப்படி

**முடிவுரை**

ஒவ்வொரு மனிதனும் அவரவர் வாழும் இடத்திற்கேற்றவாறு மொழியினை அமைத்துக் கொண்டு பேசப்பட்டு வருகிறது. இவ்வாறாக தமிழ்நாட்டில் தென் மாவட்டங்களில் பேசக்கூடிய வட்டார வழக்குச் சொற்கள் மக்களிடம் எவ்வாறு புழக்கத்தில் இருக்கின்றன என்பதை, சில குறிப்பிட்ட உதாரணத்துடன் இக்கட்டுரையின் மூலம் குறிப்பிட்டுள்ளேன்.

**துணைநூற் பட்டியல்**

1. வட்டார வழக்குச் சொல் அகராதி - செந்தமிழ் அந்தணர் இரா.இளங்குமரனார்.
2. வட்டார வழக்கு - எம்.எஸ்.பூபதி.
3. எத்னொலோக் - உலக மொழிகள் பதிப்பு நிறுவனம்.
4. அகராதி நிகண்டு - புலவர் பேராசிரியர் ம.வே. பசுபதி, எம்.ஏ.